# சோழவந்தான் மகா நாடு.

## வரவேற்புக் கழகத் தலைவர் பேருரை.

### லம்பாடி பாஷை வேண்டாம்.

### ஆச்சாரியாருக்கு ஒரு கேள்வி.

### மெக்காலே பொன் மொழியைப் பாருங்கள்.

### ஸி. ஆர். சவாலுக்கு பதிலளிப்போம்.

### வீரத் தமிழர்களே விரைந்து முன் வாருங்கள்.

### தோழர் தானப்ப முதலியார் கர்ஜனை.

செந்தமிழ்த் தாயின் சீர்மிகு புதல்விகளே! புதல்வர்களே! வருக. இந்தி நுழைவால் தன் டமிழ்த்தாய் படுந்துயர் காணச் சகியாமற் கதறிக் கண்ணீர்விட்டு அவள் தன் துடர்களையத் துடிக்கும் நெஞ்சத்துடன் இங்கு கூடியிருக்கும் பெரியோர்களே! வருக! வருக!! தாய் மொழிப்பற்றால் அம்மொழிக்கு இடர் வாராது காக்கக்கடமை உணர்ச்சியுடன் பணியாற்ற உறுதி கொண்ட கர்ம வீரர்களே வருக! வருக!! வருக!!!

பண்டைத் தமிழகத்தின் பல் கலைக் கழகமாம் தமிழ்ச் சங்கத்திற்குறைவிடமான மதுரை நகரின் அருகே இருப்பதும் சரித்திரப் பெருமை வாய்ந்ததும் இன்னாள்வரையும் தமிழ்த் தாய்க்குத் தொண்டு புரியும் பெரியோர்களைப் பெற்றதுமான இச் சோழவந்தானூருக்குத் தங்களை வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தமை பற்றி பெருமகிழ்வெய்துகிறேன்.

**சோழவந்தான் பெருமை.**

சோழவந்தான் என்று சொன்ன மாத்திரத்திலேயே ஒவ்வொரு தமிழரும் தான் தமிழன் என்னும் உணர்ச்சி பொங்கிப் பூரிக்கிறான். தமிழன்னைக்குத் தொண்டு புரிவதில் இச்சிற்றூர் என்றும் பின்னடைந்ததில்லையென்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழ் மடம் என்று பெயர் வாய்ந்த கின்னி மடத்துத் தலைவர் துறவினிடம் தமிழ்க் கலை பயின்றோர்களேகர். அவர்களில் தமிழ்நாடு பூராவுக்கும் தமிழ்க்கலை வல்லானாய் விளங்கிய அரசஞ்சண்முகனாரும் ஒருவர் என்பதை மகிழ்வுடன் கூறுகிறேன். சங்கப்புலவர்களுள் ஒருவரான நச்சினார்க்கினியாரலேயே பொருள் காணப்பட்ட ஒல்காப்புகழ் தொல்காப்பியத்திற்கு பாயிர விருத்தியுரை பகன்று சங்கப் புலவருள் அங்கம் வகிக்கத் திறமை வாய்ந்தவர் எனப் பேறுபெற்றவர் ஆதலால் தமிழ் எனில் சோழவந்தானெனவும், அரசஞ்சண்முகனெனவும் சொல்லில் புகழுரையாதுமில்லை என்பது தாங்களறிந்ததே.

**தாய் மொழிச் சிறப்பு.**

நந்தாய்மொழியாம் தமிழ் மொழி பிறமொழிகளுக்கு எவ்வகையாலும் குறைந்ததில்லை. பண்டைப்புலவர் பெருமக்களாலும் அரசர்களாலும் துறவிகளாலும் ஏற்றிப்போற்றி, கண்ணின் மணியெனக் கருத்துடன் வளர்த்த பொன்மொழி. நெற்றிக் கண்ணைக் காட்டினுங் குற்றங் குற்றமே என இடித்து அறிவு புகட்டும் நீதிமொழி; "நாம் யார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என இறுமாந்து பாடநற்பெற்ற வீரமொழி. இத்தனை பெருமைக்கும் இலக்கான நம் தாய்மொழி, பல்வேறு நாட்டினர் படையெடுப்பாலும் வெவ்வேறு மதத்தினர், மொழியினர் தலையீட்டாலும் தேய்ந்து மாய்ந்து இறந்து பட்டழியாமல் உயிரோடிலங்கும் உண்மை மொழி.

ஆங்கிலேயரால், தன்னலருங் கருதி புறக்கணிக்கப்பட்ட நம் மொழி இரட்டைபாட்சி நடைபெற்ற காலையில், சுயேச்சையாச விரும்பியவண்ணம் செய்ய இயலாத சட்ட அமைப்பினால் பிணைக்கப்பட்டிருந்த அக்கால மந்திரிசபையால் நம் தாய்மொழிக்கு முதலிடம் கொடுக்க இயலாது போயிற்று. முன்னைய மந்திரி சபையாரின் இஷ்டத்தை பூரணமாய் நிறைவேற்ற அரசாங்கம் கட்டுப்பட்டிருக்க வில்லை என்பதை அரசியல் ஞானமுள்ளார் அறிந்திருப்பார்.

**ஹிந்தித்தாதி.**

தாய்நாட்டபிமானம், தேசாபிமானம், தாய்மொழிப்பற்று இத்தனைக்கும் தாங்களே தர்மகர்த்தாக்களென்பதை சாற்றும் தற்போதைய மந்திரி சபையார், நம்மிடையே, தந்திரமாக தமிழன்னைக்கு ஒரு தாதியைக் கொடுத்தவுவதாகப் பசப்பி, இந்தியெனும் ஓர் லம்பாடி மொழியை, கதம்ப மொழியை, தனக்கெனத் தனியெழுத்தேதுமில்லாத பாஷைகம், உருது, சமஸ்கிருதம் முதலிய பல மொழிகளிலிருந்து எடுத்து கையாடல் செய்த வார்த்தைகளால் இணைக்கப்பட்ட ஒரு அவியல் மொழியை, தங்களுக்கென ஒரு நாடு, மொழி, எழுத்து முதலியனவற்றை நெடுங்காலமாகப் பெற்று அனுபவித்து வரும் தமிழ் பெருங்குடி மக்களாகிய நம்மீது சம்மதி கேளாது, தான்தோன்றித்தனமாய் மெஜாரட்டி பலத்தின் மமதையால், நம்மவரை வாயில்லாப்பூச்சிகளெனத் துச்சமாக நினைத்த, வடநாட்டுப் பெரியாரொருவருக்குக்கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவான் வேண்டி தென்னாட்டார் அத்தனை பேரின் தலையிலேயும் தேனைத்தடவ ஆரம்பித்து விட்டார் நம் மகாண முதன் மந்திரி ஆச்சாரியார்.

பதவி வந்தவுடன் அதிகாரம், அதன்பின் அகங்காரம், ஆணவம், மமதை, யதேச்சாதிகாரம், ஆச்சாரியிடம் முடிவு.

ஆங்கிலம் புகுந்ததால் தமிழடைந்த வீழ்ச்சி, நிலைமாறாதிருக்கும்போதே- பிற கட்சியார் பதவி வகித்திருந்த காலத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பேசிய பேச்சுக்களும், எழுதிய எழுத்துக்களும் மறையாதிருக்கும் இந் நிலையிலேயே நாட்டுக்கு நலம் பல செய்வோமெனக் கூறி, தேர்தலில் வாக்குப்பெற்று பதவிவகிக்கும் கட்சியார் எடுத்த எடுப்பிலேயே

**ஒரு கேள்வி.**

"இந்தியை" கட்டாயப் பாடமாக்குவோம் எல்லோரும் கட்டுப்படவேண்டியதுதான் என உத்திரவிடுவார்களானால், அது நாட்டு நலத்துக்கும், மொழி வளர்ச்சிக்கும் ஆன செயல்தானா? எனக் கேட்கிறேன்.

வெறும் இறுமாப்பு நிறைந்த எதேச்சாதிகாரம் தவிர வேறு என்ன? நினைவிலும் பேச்சிலும் செயலிலும் பலாத்காரமே கூடாது எனப் புகட்டிவரும் கட்சியைச் சார்ந்த தற்கால மந்திரிசபயார், ராணுவ ஆட்சியில் ஒலிக்க வேண்டிய கட்டாயம் எனும் அடக்கு முறைப் பலாத்காரப் பதத்தை வெகு தாராளமாக, தாய் மொழியை ஒழிக்கும் இந்தியைப் புகுத்தப் பிரயோகப் படுத்துகிறார்கள். அஹிம்சா தர்மத்திற்கு இது ஓர் விந்தையான அத்தாட்சி.

**மெக்காலே கூற்று.**

ஒரு நாட்டாரையோ, சமூகத்தாரையே சுலுவாக அடிமைப் படுத்த வேண்டுமாயின் அவர்களிடையே, ஆள விரும்பும் கூட்டத்தார் தம் மொழியை அவர்களிடையே புகுத்திப் பயிலுவித்தலே போது மென்பது ஆங்கில அறிஞரான 'மெக்காலேயின் கூற்று. இக்கூற்றைக் கருத்தில் கொண்டு நீங்கள் சற்றுச் சிந்தித்துப்பார்த்தால், இந்தி நுழைவு நம் மக்களை எக்கேட்டுக்காளாக்கும் என்பது நெற்றெனவிளங்கும். நம்மவர் இரத்தத்திலும் நிறத்திலும் தமிழராயும், சுவையிலும், அபிப்பிராயத்திலும், அறிவிலும், இந்தியாளராயும் மாறி விடுவரென்பது திண்ணம்.

இந்தி புகுத்தப்படுவதற்குக் கூறப்படும் காரணங்கள் போலி என்று பல அறிஞர்களால் எடுத்துக் காட்டப்பட்ட பின்னரும் பிடிவாதமாக "நூறு பள்ளிகளிலாவது இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவேன்" என அறைகூவியழைக்கும் ஆச்சாரியாரின் ஆணவத்தை எதிர்த்துப் போராடி வெற்றிபெறவேண்டியது தமிழரின் நீங்காக் கடமையல்லவா?

**சவாலை ஏற்போம்.**

இங்கு கூடியுள்ள தமிழ் மக்களாகிய நாமனைவரும் தமிழனுக்கு உயிருண்டு, உணவுண்டு, பலமுண்டு, போர்க் குணமுண்டு, தாய்மொழி காக்க உயிரைத்திரணமாக மதிப்போம். ஆச்சாரியார் சவாலை ஏற்போம். அவர் கருத்து நிறைவேறாவண்ணம் அழிப்போம் எனக் கூறிக்கொண்டு வேண்டுவன செய்யும் வகை காணகூடி ஒருமித்த முடிவுக்கு வரும்படி தங்கள் அனைவரையும் வேண்டிக் கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

---

## செகோஸ்லோவேகியாவுக்கு பிரிட்டன்-பிரஞ் உபதேசம்.

### ஜெர்மனியருக்கு விட்டுக் கொடுக்க யோசனை.

### செகோஸ்லோவேகியா பதில்.

### ஜெர்மனியுடன் வர்த்தகம் செய்ய முடியாதாம்.

:o:

### தங்களுக்கு கடன் கொடுத்துதவ வேண்டுமாம்.

பிரேக், மே. 7.

செகோஸ்லோவேகியாவின் பந்தோபஸ்துக்குப் பாதகமற்ற முறையில் இந்நாட்டிலுள்ள ஜெர்மனியருக்கு கூடியவரை அதிகமாக விட்டுக்கொடுப்பதே நலமென இங்குள்ள பிரிட்டிஷ், பிரஞ்சு ஸ்தானீகர்கள் செகோஸ்லோவேகிய சர்க்காரிடம் தெரிவித்தனர்.

**ஜெர்மன் சர்க்காரிடம் அறிவிப்பு**

பெர்லின், மே. 7.

பிரிட்டன் செகோஸ்லோவேகியாவுக்கு விடுத்துள்ள யோசனையின் விவரத்தை இன்று பிரிட்டிஷ் ஸ்தானீகர் ஜெர்மன் சர்க்காருக்குத் தெரிவித்தார்.

**சேகோஸ்லோவேகியா பதில்**

பிரேக், மே. 7.

டான்யூப் நதியை ஒட்டியுள்ள நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய வேண்டுமென பிரிட்டிஷ் பிரஞ்சு சர்க்கார் செகோஸ்லோவேகிய சர்க்காருக்குத் தெரிவித்திருந்தனர்.

செகோஸ்லோவேகியா அதனருகிலுள்ள நாடுகளும் ... களுக்கும், ஜெர்மனிக்கும் உள்ள ஒப்பந்தத்தினின்றும் விடுபட... டான்யூப் நதியோரமுள்ள நாடுகள் இனி ஜெர்மனிக்குப் பதில் பிரிட்டன், பிரான்ஸ் இவைகளுடன் வியாபாரம் நடத்தத்... வர்த்தக ஒப்பந்தங்கள் வி... க்கும் பொருட்டும் அவ்வி... நாடுகளும் தங்களுக்குக் கடன் கொடுத்து உதவுமாறு செகோஸ்லோவேகிய சர்க்கார் பிரிட்டனையும் பிரான்ஸையும் கேட்டுக் கொள்வரெனத் தெரிகிறது.

---

## ஒரு வேண்டுகோ...

கோலார், மே.

கோலார் தங்கவயல் 'விடுதலை' ஏஜண்டு தோழர் ஆர். சுப்பரம...யம் அவர்கள் சில நாட்களாக நோய் வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிற...யால், வாசகர்கள் தயவுசெய்து சந்தாவை நிறுத்தி வைக்காமல் பூராதொகையையும் செலுத்...படியாக வேண்டிக்கொள்...றேன் என மேற்படி ...னர் தப்பி சுஸ். நெங்காத... எழுதுகிறார்